**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 10.10.2024 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

கிழக்கு நோக்கி செயல்படுவதான இந்தியாவின் கொள்கை, ஆசியான் நாடுகள் உடனான உறவுகளுக்கு, புதிய உத்வேகம் கொடுத்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இந்திய தொழில் நிறுவனங்கள் தங்களின் பரிமாணம் மற்றும் செயல்பாட்டு நிலையை பெரிய அளவில் உயர்த்திக் கொள்ள வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

மத்திய சுகாதார அமைச்சகத்தின் டெலி-மனஸ் மொபைல் செயலியும், வீடியோ அழைப்பு மூலம் மனநல ஆலோசனை பெறுவதற்கான வசதியும், புதுடெல்லியில்,இன்று தொடக்கி வைக்கப்பட்டன.

தொழிலதிபர் ரத்தன் டாடா மறைவு குறித்து புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**லாவோஸ்**

கிழக்கு நோக்கி செயல்படுவதான இந்தியாவின் கொள்கை, ஆசியான் நாடுகள் உடனான உறவுகளுக்கு, புதிய ஆற்றல், உத்வேகம் மற்றும் திசை நோக்கம் கொடுத்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி

கூறி உள்ளார். இன்று லாவோஸ் நாட்டின் வியன்டியன் நகரில், இந்தியா-ஆசியான் உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், இந்தியாவும், ஆசியான் நாடுகளும், அமைதியை விரும்பக் கூடிய, ஒருவரின் இறையாண்மையை மற்றவர் மதிக்க கூடிய நாடுகள் என்று அவர் கூறினார். உலகின் பல பகுதிகளில் பதற்றமும். பிணக்குகளும் காணப்படும் நிலையில், இந்தியாவிற்கும், ஆசியான் நாடுகளுக்கும் இடையிலான, நட்புறவு, ஒத்துழைப்பு, கூட்டாண்மை, மற்றும், பேச்சு வார்த்தைகள் மிக முக்கியமானவை என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவிற்கும் ஆசியான் பிராந்தியத்திற்கும் இடையிலான வர்த்தகம், கடந்த 10 ஆண்டுகளில், 130 பில்லியன் டாலராக, சுமார் 2 மடங்கு அதிகரித்து இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார். 7 ஆசியான் நாடுகளுடன் இந்தியா ஏற்கனவே, நேரடி விமான இணைப்புக் கொண்டுள்ளதாகவும், புரூனே நாட்டிற்கான நேரடி விமான சேவை விரைவில் தொடங்கும் என்றும் அவர் தெரிவித்தார். திமோர்-லெஸ்தே நாட்டில் இந்தியா, புதிய தூதரகம் திறந்து இருப்பதையும் சிங்கப்பூருடன், இந்தியா முதல் நாடாக, ஃபின்-டெக் இணைப்பு நிறுவி இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். முன்னதாக இன்று பிற்பகல் வியன்டியன் சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடியை, லாவோஸ் உள்துறை அமைச்சர் வரவேற்றார். தொடர்ந்து லாவோசில் உள்ள இந்திய சமூகத்தினர் ஓட்டலில் வைத்து பிரதமரை வரவேற்றனர். பின்னர் பிரதமர் திரு நரேந்திர மோடி, லாவோசின் புகழ்பெற்ற நாடகக் குழுவினரின்

லாவோ ராமாயண நிகழ்ச்சியை பார்வையிட்டார். பவுத்த குருமார்களின் ஆசீர்வாத நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொண்டார்.

2 நாள் லாவோஸ் பயணத்தின் முதல் நாளான இன்று ஆசியான் கூட்டமைப்பின் பல்வேறு நாடுகளுடன் இருதரப்பு கூட்டங்களை நடத்துகிறார். இப்பயணத்தின் போது 19-ஆவது கிழக்காசிய உச்சி மாநாட்டிலும் அவர் கலந்து கொள்கிறார்.

***மோடி-நவராத்திரி***

நவராத்திரி பண்டிகையின் 8-ஆம் நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி, மகா கௌரி தேவிக்கு பிரார்த்தனை செலுத்தி உள்ளார். தேவியின் பக்தர்கள் அனைவரின் வாழ்விலும், மகிழ்ச்சியும், வளமும் நிலவத் தாம் வாழ்த்துவதாக, சமூக ஊடக பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார்.

***அமித் ஷா-தொழில்***

இந்திய தொழில் நிறுவனங்கள் தங்களின் பரிமாணம் மற்றும் செயல்பாட்டு நிலையை பெரிய அளவில் உயர்த்திக் கொள்ள வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் பஞ்சாப்-அரியானா-டெல்லி தொழில் வர்த்தகப் பேரவையின் வருடாந்திர அமர்வில் உரையாற்றிய அவர் இந்திய தொழில் நிறுவனங்கள் பெரிய அளவில் கனவு கண்டு, உலக நிறுவனங்களாக மேம்பட வேண்டும் என்றும் இக்கனவை நனவாக்க தொழில்-வர்த்தக அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் கூறினார்.

காலனி ஆட்சியின் போது கொண்டு வரப்பட்ட, தேவையற்ற சுமார் 2 ஆயிரம் சட்டங்களை அரசு ரத்து செய்து இருப்பதையும், கம்பெனிகள் சட்டத்தில் இருந்து பல குற்றவியல் தண்டனைகள் நீக்கப்பட்டு, விதிமுறைகளுக்கு இணங்குவதில் நிறுவனங்கள் மீதான சுமை குறைக்கப் பட்டுள்ளதையும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். அடுத்த 25 ஆண்டுகளில், ஒவ்வொரு துறையிலும் உலகின் முன்னணி நாடாக இந்தியாவை மேம்படுத்துவதே பிரதமர் திரு நரேந்திர மோடியின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் பல ஜனநாயக நாடுகளில் அரசு மீதான மக்களின் நம்பிக்கை குறைந்து நீடித்த தலைமை அரிதாகி உள்ள நிலையில் இந்தியாவில் தான் பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்ந்து 23 ஆண்டுகளாக மக்களின் நம்பிக்கைக்கு உரிய தலைவராக திகழ்வதாகவும், இத்தகைய ஸ்திரத் தன்மை காரணமாகவே கொள்கைகளைத் திறம்பட்ட முறையில் அமல்படுத்த முடிவதாகவும் அவர் கூறினார். நடப்பு 2024-ஆம் ஆண்டு இந்தியாவின் தொழில் துறையில் மிக முக்கிய ஆண்டாக திகழும் என்று அவர் மேலும் கூறினார்.

***மனநல தினம்***

உலக மனநல தினமான இன்று, மத்திய சுகாதார அமைச்சகத்தின் டெலி-மனஸ் மொபைல் செயலியும், வீடியோ அழைப்பு மூலம் மனநல ஆலோசனை பெறுவதற்கான வசதியும், புதுடெல்லியில் தொடக்கி வைக்கப்பட்டன. இவ்வாண்டு உலக மனநல தினம், பணியிடத்தில்

மனநலம் என்ற கருப்பொருள் அடிப்படையில் கடைபிடிக்கப் படுவதன் அடிப்படையில், ஊழியர்கள் தங்கள் மன நலனை தாங்களே பராமரித்துக் கொள்வது எப்படி என்பது பற்றிய தகவல் தொகுப்பும், டெலி-மனஸ் தொலைநிலை மனநல ஆலோசனை வசதி பற்றிய உலக சுகாதார அமைப்பின் மதிப்பீட்டு அறிக்கையும், இந்நிகழ்ச்சியின் போது வெளியிடப்பட்டன. டெலிமனஸ் தொலைபேசி வசதியின் 2-ஆம் ஆண்டு விழாவையும், அமைச்சகம் இன்று கொண்டாடியது. அரசின் இந்த புரட்சிகரமான முன் முயற்சி பெரிய அளவில் வேகமாக விரிவடைந்து வருவதாக சுகாதாரத் துறை செயலர் திருமதி ஆராதனா பட் நாயக் கூறினார். உலகில் 60 சதவிகித மக்கள் ஏதேனும் ஒரு வகையில் மன அழுத்தத்தால் பாதிக்கப் பட்டுள்ளதால் சவாலான இந்நிலையை திறம்பட்ட முறையில் சமாளித்தல் அவசியம் என்று உலக சுகாதார அமைப்பின் இந்திய பிரதிநிதி டாக்டர் ரோட்ரிக்கோ ஆஃப்ரின் கூறினார்.

***புதுச்சேரி-இரங்கல்***

தொழிலதிபர் ரத்தன் டாடா மறைவு குறித்து புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். இந்திய தொழில் துறையின் அடையாளங்களில் ஒருவராக திகழ்ந்தவர் ரத்தன் டாடா என்றும் இந்திய தொழில் துறையை வலுப்படுத்தி உலகப் பொருளாதாரத்தில் இந்தியாவிற்கு சிறப்பான இடம் பெற்றுத் தர அவர் தொடர்ந்து பாடுபட்டதாகவும் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தமது

இரங்கல் செய்தியில் கூறி உள்ளார். சிறந்த மனிதாபிமானியாகவும் திகழ்ந்த ரத்தன் டாடாவின் மறைவு இந்திய தொழில் துறைக்கும் மனித சமுதாயத்திற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு ரங்கசாமி விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தொழில்கள் மூலம் நாட்டையும் சமூகத்தையும் மேம்படுத்துவதை சித்தாந்தமாகவே கொண்டிருந்தவர் ரத்தன் டாடா என்றும் பணிவு, பெருந்தன்மை, மற்றும், தொலைநோக்கு பார்வைக்கு பெயர் பெற்ற அன்னாரின் மறைவு நாட்டிற்கு மிகப் பெரிய இழப்பாகும் என்றும் கூறி உள்ளார். அடுத்த தலைமுறைத் தொழில் முனைவோருக்கு என்றென்றும் முன்மாதிரியாக ரத்தன் டாடா திகழ்வார் என்றும் முதலமைச்சர் கூறி உள்ளார்.

*ரத்தன் டாடா*

மும்பையில் நேற்று இரவு காலமான புகழ்பெற்ற தொழில் அதிபர் மற்றும் அறக் கொடையாளர் ரத்தன் டாடாவின் உடலுக்கு இன்று மும்பை என்சிபிஏ மைதானத்தில் பல்வேறு தலைவர்கள், தொழில் அதிபர்கள் மற்றும் பிரபலங்களும், ஏராளமான பொது மக்களும் அஞ்சலி செலுத்தினர். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் பலரும் ரத்தன் டாடா மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ளனர். மும்பையில் ரத்தன் டாடாவின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தியவர்களில், மத்திய

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா. மகாராஷ்டிர துணை முதலமைச்சர் திரு அஜித்பவார், முன்னாள் முதலமைச்சர் திரு உத்தவ் தாக்கரே, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்திகாந்த தாஸ், தொழிலதிபர் குமாரமங்கலம் பிர்லா ஆகியோரும் அடங்குவர். ரத்தன் டாடா மறைவை ஒட்டி, மகாராஷ்டிர அரசு இன்று ஒருநாள் துக்கம் அறிவித்துள்ளது. முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே தலைமையில் மும்பையில் நடைபெற்ற மாநில அமைச்சரவைக் கூட்டத்தில், ரத்தன் டாடா மறைவிற்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ரத்தன் டாடாவிற்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் இத்தீர்மானத்தில் இடம் பெற்றுள்ளது.

*வரி-பகிர்வு*

மத்திய அரசு, தனது வரி வருமானத்தில் மாநில அரசுகளின் பங்காக இன்று 1 லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாய் விடுவித்துள்ளது. பண்டிகை காலத்தை கருத்தில் கொண்டும், மாநில அரசுகள் தங்களின் மூலதன செலவுகளை அதிகரித்து, வளர்ச்சி திட்டங்கள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களுக்கான செலவுகளை சமாளிக்க ஏதுவாகவும், 1 தவணை நிதி முன் கூட்டியே விடுவிக்கப்படுவதாக மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. வரி பகிர்வில் அதிக பட்சமாக உத்தரபிரதேஷ் மாநிலத்திற்கு 31 ஆயிரத்து 962 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த இடங்களில் பீகார் மத்திய பிரதேஷ் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

*அஸ்வினி-சினிமா*

இந்தியாவில் பல்வேறு மொழிகளில், பலதரப்பட்ட கலாச்சார பின்னணியுடன் தயாரிக்கப்படும் திரைப்படங்கள், மக்களின் ஒற்றுமையை பேணி வளர்ப்பதில், நீண்ட காலமாகவே முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி உள்ளார். ஒரே பாரதம்-உன்னத பாரதம் என்னும் தொலைநோக்கு பார்வையை வலுப்படுத்துவதில் இனி வரும் காலங்களிலும் முக்கிய கருவியாக திரைப்படங்கள் திகழும் என்று, கட்டுரை ஒன்றில் அவர் கூறி உள்ளார். இந்திய திரைப்படங்கள் மொழி மற்றும் பிராந்திய எல்லைகளைத் தாண்டி, பொதுவான உணர்வுகள் மற்றும் அனுபவங்களையே மக்களுக்கு வழங்குவதாகவும், திரைப்படங்களில் பல மொழிகள் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், திரைப்பட மொழி என்பது ஒன்றுதான் என பிரபல இயக்குநர் சத்யஜித் ரே ஒருமுறை கூறியதற்கு இதுவே பொருள் என்றும் அமைச்சர் கூறி உள்ளார். பிரிவினைகளை ஒருங்கிணைக்கும் பாலமாக திகழ்வதே திரைப்படங்களின் சக்தி என்றும் முக்கியமான இந்த சக்தியை கொண்டாடவே, மத்திய அரசு ஆண்டுதோறும் தேசிய திரைப்பட விருதுகளை வழங்கி வருவதாகவும் அவர் கூறி உள்ளார். இந்திய படைப்பாற்றல் தொழில் நுட்பக் கழகம் போன்ற மத்திய அரசின் புதிய முன் முயற்சிகளால், இந்திய திரைப்படங்கள் உலக அரங்கிற்கு உயரும் என்றும் கட்டுரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

***மழை***

அரபிக் கடலில் நேற்று உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடைந்து, மத்திய கிழக்கு அரபிக் கடல், மற்றும், கர்நாடகா-கோவா கடற்கரைப் பகுதிகளில் நிலவுகிறது. இன்றைய தினம், திருப்பூர் மற்றும் கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, ஈரோடு, சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழைக்கும், கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மற்றும், தர்மபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 16-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும், பல்வேறு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

***காரைக்கால்***

காரைக்கால் மாவட்டம் மேல ஓடுதுறைப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலைத் துறைகளின் ஒருபகுதியாக கீழத் தெருவின் குறுக்கே பாலம் வருவதால் அங்கிருந்து மேலத்தெரு கிராமத்திற்கு, கனரக வாகனங்கள் சென்று வரமுடியாத சூழல் ஏற்படும் என பொது மக்கள் கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்து, காரைக்கால் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு நாஜீம், நிரவி-திருப்பட்டிணம் தொகுதி உறுப்பினர் திரு நாக தியாகராஜன் ஆகியோர், இன்று அப்பகுதிக்கு நேரில்

சென்று ஆய்வு மேற்கொண்டனர். மாற்று ஏற்பாடுகள் குறித்து, அதிகாரிகளுடன் ஆலோசிக்கப் பட்டது.

***உத்தராகண்ட்***

உத்தராகண்ட் மாநிலத்தின் சவோலி மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற ஹேம்குண்ட் சாகிப் சீக்கிய வழிபாட்டுத் தலம், குளிர் காலத்திற்காக இன்று முறைப்படி மூடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நடைபெற்ற மதசடங்குகளில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். ஹேம்குண்ட் சாகிப் வழிபாட்டு தலம் இவ்வாண்டு மே 25-ஆம் தேதி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து மொத்தம் 1 லட்சத்து 85 ஆயிரம் யாத்திரிகர்கள் இங்கு வழிபாடு செய்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

கிழக்கு நோக்கி செயல்படுவதான இந்தியாவின் கொள்கை, ஆசியான் நாடுகள் உடனான உறவுகளுக்கு, புதிய உத்வேகம் கொடுத்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இந்திய தொழில் நிறுவனங்கள் தங்களின் பரிமாணம் மற்றும் செயல்பாட்டு நிலையை பெரிய அளவில் உயர்த்திக் கொள்ள வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

மத்திய சுகாதார அமைச்சகத்தின் டெலி-மனஸ் மொபைல் செயலியும், வீடியோ அழைப்பு மூலம் மனநல ஆலோசனை பெறுவதற்கான வசதியும், புதுடெல்லியில்,இன்று தொடக்கி வைக்கப்பட்டன.

தொழிலதிபர் ரத்தன் டாடா மறைவு குறித்து புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

---------------------------